# 3. தற்புரிதல்




வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதல் இல்லாத நிலையில், இளம் நபரை கவரக்கூடிய அல்லது அங்குமிங்கும் சொல்லப்படுவதைக் கேள்விப்படுவதன் அடிப்படையில், அதிகப் பொருட்செலவின்றிக் கிடைக்க வாய்ப்புள்ள ஒரு வாழ்வாதாரப்பணியைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கான வாய்ப்புகளே அதிகமுள்ளன. பயனுள்ள வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதல் என்பது, அந்த இளம் நபர் உயர்மட்ட அளவில் சுய விழிப்புணர்வு பெற வழிவகுக்க உதவுகிறது.

ஒருவர், தன்னைத் தானே கண்டடைவதென்பது, அவரது வாழ்வாதாரப்பணியினைக் கண்டடைவதன் தொடக்கமேயாகும். பயனுள்ள வாழ்வாதாரப்பணியினைத் தேர்ந்தெடுக்கும் முடிவினை மேற்கொள்ளுதல், பின்வரும் அடிக்கருத்துகளில் கவனம் செலுத்துகிறது.

- விருப்பார்வங்கள், ஆசை மற்றும் வினைநோக்கங்கள்
- திறமைகள் மற்றும் இயல்திறன்கள்.
- வேலை மற்றும் வாழ்வாதாரப்பணி குறித்த நம்பிக்கைகள் மற்றும் மனப்பான்மைகள்.

## 3.1. விருப்பார்வங்கள் என்பன யாவை?

நீராவி எந்திரத்தை, இயக்கும் நீராவி போன்றவையே விருப்பார்வங்கள். விருப்பார்வங்கள் தனிமனித ஆளுமைப்பண்புகளாக அவன் அல்லது அவளை ஊக்குவித்து வினைநோக்கி செலுத்துகின்றன. தனிப்பட்ட விருப்பார்வங்கள் பின்வருமாறு:

- விருப்பு, வெறுப்பு மற்றும் ஆர்வமின்மையின் வடிவங்கள்
- தனிநபரின் கவனத்தை ஈர்க்கின்ற செயல்கள்
- தனிநபரை வியப்பார்வம் கொள்ளவைக்கும் விஷயங்கள்
- தனிநபரை மேலும்மேலுமாகத் தொடர்ந்து செயல்படத் தூண்டும் விஷயங்கள்
- மதிப்புக்குரியதென அத்தனிநபர் கருதும் செயல்கள்
- விருப்பத்துடன் அனுபவித்துச் செய்கிற செயல்கள்

வெவ்வேறு நபர்களும், வெவ்வேறு விருப்பார்வங்கள் கொண்டவர்களாக இருக்கின்றனர். ஒருவரின் விருப்பார்வம், அவரை நூல் வாசிப்புக்குச் செலுத்துகையில், மற்றொருவர், இருசக்கர இயக்கூர்தியைப் பழுதுநீக்குவதற்கு ஈர்க்கப்படலாம். விருப்பார்வங்கள், சிலநேரங்களில் தனிநபரின் பொழுதுபோக்குகள் விருப்பார்வங்களின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றன. விருப்பார்வங்கள், வேலை மீதான ஒரு தனிமனிதரின் ஈடுபாட்டில், மிக வலிமையுடன் தாக்கம் செலுத்துகின்றன. ஒரு வேலை ஆர்வமுள்ளதாக இல்லையெனில், அவ்வேலையில் தொடர்ந்து ஈடுபாடு கொள்ள, அதிக சக்தியினைச் செலவழிக்கவேண்டியதாக அமைகிறது. ஒரு வேலை அல்லது ஒரு வாழ்வாதாரப்பணி ஆர்வமற்றதாக இருப்பின், அவ்வேலையில் தனிநபரின் செயல்பாட்டுத்திறன் பாதிக்கப்படுகிறது. இந்நிலை தனிநபரின் வாழ்வாதாரப்பணி வெற்றியாக்கத்திலும் பாதிப்பு ஏற்படுத்துகிறது.

**கருத்தாடல் களம்**

- விருப்பார்வங்கள் எவ்வகையில் உருவாகின்றன?
- “எனக்கு விருப்பமான ஒன்றெனில் , நான் அதில் சிறந்து விளங்கமுடியும்.” சரியா / தவறா?

**விருப்பார்வங்கள் தொடர்பாகக் கருத்தில் கொள்ள வேண்டிய இரு கருத்துக்கள்.**

*விருப்பார்வங்கள் மாறுகின்ற பண்புடையன:*

தனிநபரின் வாழ்வாதாரப்பணி விருப்பார்வங்கள், அவரது 16 - 18 வயது வரையிலும் மிகப்பெரும் மாற்றங்களுக்குட்படுபவை. இப்பருவம் கடந்த பிறகே (முதிர்நிலைப் பருவத்துக்கு மிக நெருங்கிய காலத்தின் போது) அந்த விருப்பார்வங்கள் அதிக நிலைப்புத் தன்மை கொண்டனவாக இருக்க வாய்ப்பிருக்கிறது. எனினும், மேலெழுந்துவருகிற பொருளாதாரங்களில் மிகமிக அண்மைக்கால ஆய்வு, முதிர்நிலைப் பருவத்திலுங்கூட விருப்பார்வங்கள் மாறக்கூடுமெனத் தெரிவிக்கிறது. இது எதனாலெனில், அந்தப் பொருளாதாரங்களில் பல்வேறு புதிய வாழ்வாதாரப்பணி வாய்ப்புகள் புதிதாகப் பெருகியிருப்பதனாலேயே ஆகும்.

விருப்பார்வமொன்றின் வலிமைக்கு மிக நெருக்கமான தொடர்புடைய விஷயங்கள்:

- குறிப்பிட்ட செயல் ஒன்றில் கிடைத்த சொந்த அனுபவங்கள்
- குறிப்பிட்ட செயல் ஒன்றினைச் சிறப்பாகச் செய்து முடிக்க முடியுமென்ற நம்பிக்கை
- குறிப்பிட்ட செயல் குறித்து தனிநபர் கொண்டிருந்த உளப்பாங்கு நிலை மற்றும் முன்கணித்த கருத்துக்கள் மற்றும் சொந்த வாழ்வில் கிடைத்த அனுபவங்கள் (எ.கா. வாழ்வாதாரப்பணிசார் நம்பிக்கைகள்)

வாழ்வாதாரப்பணிசார் மேம்பாட்டுப் படிநிலைகளில், ஒரு தனிநபர் நகர, சொந்த அனுபவங்கள் மற்றும் புறத்தாக்கங்கள், ஏற்கெனவேயே இருக்கிற விருப்பார்வங்களை வலிமைப்படுத்தவோ அல்லது விருப்பார்வத்தினை வேறு ஏதாவதொரு செயல் புலம் நோக்கி மாற்றவோ காரணமாக அமையக்கூடும். இது வழக்கமான மற்றும் இயல்பான ஒன்றாகும். நுட்பமுள்ள தெளிவுடைய மற்றும் தனிநபர் மைய வாழ்வாதாரப்பணிசார் கல்வி, இளம் நபரினை அவர்/அவளது வாழ்க்கையின் குறிப்பிட்ட படிநிலைகளோடு ஒருங்கிணைந்த விருப்பார்வத் தொகுதியோடு பிணைத்துவிடுவதில்லை. வாழ்வாதாரப்பணி முடிவெடுத்து, எந்த ஒரு பணியையும் ஏற்பதற்கு முன், இளம் நபர் அவர்/அவளின் விருப்பார்வங்களை முழுமையாகக் கண்டடையவே பயனுள்ள வாழ்வாதாரப்பணிக்கல்வி உதவுகிறது.

***மிகு விருப்பார்வம், உயர்நிலைத் திறமையைக் குறித்ததாகாது.***

இது, வாழ்வாதாரப்பணி வழிகாட்டுநர் கவனம்கொள்ள வேண்டிய மிக முக்கியமானதொரு கருத்தாக்கமாகும். குறிப்பிட்ட ஒரு செயல் மீதான விருப்பார்வம், அத்தனிநபர் அச்செயலினை நோக்கி ஈர்க்கப்பட்டிருக்கிறார் என்பதுடன், அதன் மூலம் மகிழ்ச்சிகொள்கிறார் என்பதையும் குறிக்கிறது. அதனாலேயே, அவர் /அவள் அச்செயலில் சிறப்பானவரென்று பொருள் கொள்வதற்கான இடமில்லை. ஒரு வாழ்வாதாரப்பணியில் வெற்றி என்பது

தீவிரப் போட்டிச் சூழலுக்குள்ளாகவே எட்டப்படுகிற ஒன்றாகிறது. வெறுமனே விருப்பார்வத்துடன் ஊக்குவித்து கொண்டிருப்பதாலேயே, அவ்வூக்குவித்தல் எத்தகைய வலிமையுடையதாக இருப்பினும், அந்தத் தனிநபர் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றிபெறுவதற்குப் போதுமான உயர்மட்டத்திறனை வளர்த்துக்கொள்வாரென்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

தனிநபர் ஒருவர் அவரது சொந்த விருப்பார்வங்களை அடையாளம் காண்பதற்கு உதவுதலென்பது வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதலின் முக்கியமான செயல்களில் ஒன்று. தற்புரிதலை மிகுதிப்படுத்துவதற்கு, ஒருவரை, அவர் ஈர்க்கப்பட்டுள்ள செயல்கள் குறித்து விழிப்புணர்வுமிக்கவராக்குதலே மிகச்சிறந்த பங்களிப்பாக அமைகிறது. எனினும் பயனுள்ள வாழ்வாதாரப்பணியினைத் தேர்ந்தெடுப்பதற்கான தற்புரிதலுக்கு மேலும் நெடுந்தூரம் செல்லவேண்டியிருக்கிறது.

## 3.2. இயல்திறன்கள் என்பன யாவை?

விருப்பார்வம் நீராவி எந்திரத்தின் நீராவியெனில், இயல்திறன் எந்திரத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம் - குறிப்பிட்ட ஒரு வேலைத்தொகுதியினை நிறைவேற்றி முடிப்பதில் வெற்றிபெறச்செய்கின்ற மெய்யான செயல்திறனாகும். இயல்திறன்கள், தற்புரிதலின் இரண்டாவது உட்கூறாகும். இயல்திறன்கள் நமக்குத் தெரிவிப்பன:

- செயல் வல்லமை மற்றும் திறமைகள்
- ஒருவர் இயல்பாகவே சிறப்பாகச் செயல்படுவது
- செயலாற்றி முடிப்பதற்கான தகுதி
- உள்ளார்ந்த திறன்
- முதன்மைநிலை பெறுதல் எளிதாகும் தன்மை.
- வெற்றிபெறுவதற்கான வாய்ப்புமிகுதி

**கருத்தாடல் களம்**

- **இயல்திறன்கள் எப்படி உருவாகின்றன?**

- **“இயல்திறன்கள், விருப்பார்வங்களைக் காட்டிலும் அதிகம் மாற்றமடைபவை” சரியா /தவறா?**

## 3.3. உள்ளாற்றல்? : விருப்பார்வம் மற்றும் இயல்திறனின் ஒருங்கிணைவு

### 3.3.1. விருப்பார்வம் - இயல்திறன் ஒன்றின் மேலொன்று கவிதல்

விருப்பார்வம், இயல்திறன் இரண்டுமே தன்னையறிதலில் முக்கிய அம்சங்களாகும். தனிநபர் ஆளுமையின் இந்த இரண்டு முகக்கூறுகளில் ஒன்றில் மட்டுமே கவனம்செலுத்தும் போக்கு, வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதலின் சில அமைப்பு முறைகளின் போதாமையாகும். சில அமைப்பு முறைகள் விருப்பார்வங்களின் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொள்ளுகின்றன. பிற அமைப்பு முறைகள் இயல்திறனில் அதிக கவனம் செலுத்துகின்றன. ஜீவா அணுகுமுறையில் விருப்பார்வம் மற்றும் இயல்திறன் என்ற இரண்டிலுமான ஆய்வுகளுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. இங்கே வழிகாட்டுநரின் முன்பிருக்கும் பணி, இளம் நபர், அவர்/அவளது விருப்பார்வங்கள் மட்டுமின்றி கூடவே அவர்/அவளது திறமைகளையும் கண்டறிய உதவுவதேயாகும்.

இந்த இடத்தில்தான் உயிராதாரமான ஒரு கருத்து எழுகிறது. ஒரு தனிநபரின் விருப்பார்வங்களில் சில, அவரது இயல்திறன் தொகுப்புக்குப் பொருத்தமின்றி அமைந்திருக்க வாய்ப்புள்ளது. அதுபோலவே தனிநபர் அவர்/ அவளது இயல்திறனில் சிலவற்றுக்குப் பொருத்தமான வாழ்வாதாரப்பணிகளில் ஆர்வம் காட்டாமலிருக்கவும் கூடும். ஆகவே, வாழ்வாதாரப்பணி வழிகாட்டுநரின் முன் இருக்கும் முக்கியமான பணி என்பது, வாழ்வாதாரப்பணி தேடுபவர், அவரது விருப்பார்வமும், இயல்திறனும் ஒன்றுமேலொன்றாகக் கவிந்திருக்கும் இடங்களை, அவராகவே கண்டறிய உதவுவதே ஆகும்.

கீழே இருக்கும் படம் விருப்பார்வத்துக்கும், இயல்திறனுக்குமிடையிலான பரிமாற்ற உள் வினையை காட்டுகிறது. இத்தொடர்பினைக் கண்டறிவது, தனிநபர் ஆர்வம் கொண்டிருப்பதோடு மட்டுமில்லாமல், தனித்திறமையும் கொண்டுவிளங்கும் குறிப்பிட்ட வாழ்வாதாரப்பணிப் புலங்களை அடையாளம் காண உதவும்.

**விருப்பார்வங்கள் மற்றும் இயல்திறன்கள் - ஒன்றின் மேலொன்று கவியும் இடம்**




வாழ்வாதாரப்பணி வழிகாட்டுநரின் முக்கியமான பணிகளிலொன்று, வாழ்வாதாரப்பணி தேடுபவர், அவரது விருப்பார்வமும் இயல்திறனும் ஒன்றுமேலொன்றாகக் கவிந்திருக்கும் இடங்களை,

### 3.3.2 ஒரு வாழ்வாதாரப்பணிக்கு எத்தனை உள்ளாற்றல்கள் தேவைப்படுகின்றன?

அனைத்து வாழ்வாதாரப்பணிகளுக்குமே, பல உள்ளாற்றல்கள் இணைந்த கூட்டு உள்ளாற்றலே தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கட்டடக்கலை சார்ந்த வாழ்வாதாரப்பணி ஒன்றுக்கு வரைபடம் எழுதுதல் மற்றும் படம் தீட்டுதலோடு, கணக்கிடுதல் மற்றும் சரியாக முன்கணிக்கும் செயல்திறனும் தேவைப்படும். வெற்றிகரமான அணிகலன் வடிவமைப்பாளருக்கான இயல்திறன் தேவைத்தொகுப்பில், நுண்மையான தசை இயக்குத்திறனுடன் நிறங்கள், உருவம் மற்றும் வடிவங்களைக் கூர்ந்துணரும் திறனும் இடம்பெறும். நோய்கண்டறிதலில் உயர்திறன் பெற்ற ஒரு மருத்துவர், மானுட உணர்வுகள் மற்றும் உணர்ச்சிப் பீறிடல்கள் குறித்துக் கவலையற்றவராகவும், கரடுமுரடான சுபாவமுள்ளவராகவும் இருப்பின் சிறந்த ஒரு மருத்துவத்தொழில் நடத்துபவராக விளங்க இயலாது. வாழ்வாதாரப்பணி ஒவ்வொன்றும் வேலைகளின்தொகுதி ஒன்றினை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. குறிப்பிட்டவொரு வாழ்வாதாரப்பணியுடன் இணைந்துள்ள வேலைகளில், கூடுதல் எண்ணிக்கையிலான வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிக்கிற உள்ளாற்றல், அவ்வாழ்வாதாரப்பணியில் வெற்றிக்கான பங்களிப்பினைச் செய்கிறது.

## 3.4. வாழ்வாதாரப்பணிசார் நம்பிக்கைகளைப் புரிந்துகொள்ளுதல்

### 3.4.1. வாழ்வாதாரப்பணிசார் நம்பிக்கைகள் என்பன யாவை?

வாழ்வாதாரப்பணிசார் நம்பிக்கைகள் என்பன வாழ்வாதாரப்பணியைத் தேர்ந்தெடுப்பது குறித்து அல்லது பணி உலகம் குறித்துக் கொண்டுள்ள திடமான கருத்துக்களாகும். எடுத்துக்காட்டாக, வாழ்வாதாரப்பணியினைத் தேர்ந்தெடுப்பதில் பெருமிதம், வலிமையான ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. சில பணி இடங்கள் பெருமிதமிக்கவையாகக் கருதப்படும்போது, பிற பணியிடங்கள் அவ்வாறு கருதப்படுவதில்லை. இத்தகைய பெருமிதம்மிக்க வாழ்வாதாரப்பணியிடங்களுக்கு மிகத் தீவிரமான போட்டி நிலவுவதோடு, அவ்வாழ்வாதாரப்பணிகளுக்கான தேர்வு வரையறைகள் கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக இருப்பதோடு பலவற்றிலும் ஊழல் நிறைந்ததாகவுமுள்ளது. இந்தியக் குடும்பங்களில் நிலவுகிற ஒரு பொதுவான நம்பிக்கை, “அறிவியல் மேம்பட்ட பணிகளை வழங்குகிறது” என்பதாக உள்ளது. அதன் விளைவாக, மாணவர்கள், அறிவியல்துறைப்புலங்களில் திறமை குறைந்தவர்களாக இருந்தாலும், அறிவியல்துறைப் பிரிவுகளைத் தேர்ந்தெடுக்குமாறு வலியுறுத்தப்படுகின்றனர். இத்தகைய நம்பிக்கைகள் வேறு பிற வாழ்வாதாரப்பணிகள் கூடுதல் வருமானம் தருபவையாக இருந்தாலும் அவற்றின் மீது ஆர்வமிழக்கச்செய்ய அடிப்படையாகின்றன. தற்புரிதலை மிகுதிப்படுத்துதல் என்பது வாழ்வாதாரப்பணியினைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் வளர்ச்சி மீது, நம்பிக்கைகள் எந்தெந்த வகைகளில் தாக்கம்

செலுத்துகின்றன என்பது குறித்த விழிப்புணர்வினைத் தனிநபர் பெறச்செய்ய உதவுதலாகும்.

| **கருத்தாடல் களம்** | |
|---|---|
| **பொதுவான வாழ்வாதாரப்பணிசார் நம்பிக்கை** | **அதன் தாக்கம்** |
| | |
| | |
| | |

### 3.4.2. வாழ்வாதாரப்பணிசார் நம்பிக்கைகளின் வகைகள்

***செயல்தேர்ச்சி நம்பிக்கைகள்***

இந்த நம்பிக்கைகள் பணி உலகத்தில் நுழையுமுன்னர், ஒரு வாழ்வாதாரப்பணிக்கு வேண்டிய கல்வித்தகுதி மற்றும் திறன்களைப் பெறவேண்டியதன் முக்கியத்துவம் குறித்தனவாகும். செயல்தேர்ச்சி நம்பிக்கைகளைப் பின்வருவனவற்றில் காணலாம்.

- முறைப்படியான கல்வி மீது கொள்ளும் விழுமியக் கண்ணோட்டம்.
- முறைப்படியான ஒரு பயிற்சித்திட்டத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி நடப்பதற்கான ஆர்வமுடைமை.
- சமூகம் விதித்துள்ள கருத்தோட்டங்களின் அடிப்படையில் முறைப்படியான தகுதியைப் பெறுவதற்கு வள ஆதாரங்களைச் செலவிடுதல் (காலம், முயற்சி மற்றும் நிதி).

“பள்ளிக்குச் செல்வதாலேயே வேலை கிடைத்துவிடப் போவதில்லையென்பதால், பள்ளிக்குச் செல்வது காலவிரயமே,” என்ற ஒரு பொது நம்பிக்கை, வாழ்க்கை வசதிகள் குறைவான பின்னணியிலிருந்து வருகிற ஆசிய இளைஞர்கள் மத்தியில் நிலவுவதை நாங்கள் ஆவணப்படுத்தியிருக்கிறோம். இது, முறைப்படியான கல்வித்தகுதிகளை முயன்று பெறுவதில் அக்கறைகொள்ளாமலிருப்பதைச் சுட்டுகின்ற ஒரு கூற்றாகும். இது, குறிப்பாக, சமூகப் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் குழுக்களில் உண்மையென்பதை எங்கள் ஆய்வு கண்டுபிடித்து இருக்கிறது. பணித்திறன்களில் செயல்தேர்ச்சிக்குக் குறைந்த முக்கியத்துவம் அளிப்பது என்பது, பொருளாதாரத்தின் கடைசிப்படியிலிருப்பவர்கள் உயிர் பிழைத்திருப்பதற்காக குழந்தைகளைச் சம்பாதிக்க அனுப்பவேண்டியிருக்கிற பெரும் அழுத்தத்தின் விளைவாகவே இருக்க இயலும். மறுதலையாக, வகைமாதிரியான இந்திய மத்தியதரக் குடும்பமோ, செயல்தேர்ச்சிக்கான தகுதிகளைப் பெறுவதன்மீது அளவுமீறிய உயர்மதிப்பு கொண்டுள்ளது. குடும்பத்தின் குழந்தைகள் `முறையான தகுதிபெற்றவர்கள்` என்பது உறுதிப்படும் நிலைநோக்கி மாபெரும் முயற்சிகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த குடும்ப வள ஆதாரங்களும் கூடச் செலவழிக்கப்படுகின்றன. மத்திய மற்றும் உயர் மத்தியதரக் குடும்பங்கள், மேற்கல்வியுடன் இணைந்த பெருமிதத்தினை மிக வலுவான முன்காரணியாகக் கொண்டுள்ளன. இக்குழுக்கள், வாழ்க்கையோடு ஒருங்கிணைந்த தொழில் பாடப்பிரிவுகள் மீது குறைவான பெருமிதமே கொண்டுள்ளன. கல்லூரிக்கல்வி, நேரடி வேலைவாய்ப்பினை வழங்காதபோதிலுங்கூட, மத்திய மற்றும் உயர் மத்தியதரப் பிரிவினரில் மிகப் பெரும்பகுதியினரும் அதில் கவனம் செலுத்தி, அதனை மேற்கொள்கின்றனர் எனில், பெருமிதத்தின் தாக்கம் அத்தகையதாக உள்ளது.

### 3.4.3. ஆளுமை மற்றும் தன்னியக்க நம்பிக்கைகள்

இவ்வகை நம்பிக்கைகள் தனிநபரின் வாழ்க்கைச் சூழல்களில் அவர்/அவளது தன்னம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன. ஆளுமை மற்றும் தன்னியக்க நம்பிக்கைகள் தனிநபரின் தன்னம்பிக்கையில் காணப்படும் விதங்கள் :

- தன் வாழ்க்கைக்குத் தானே பொறுப்பெடுத்தல்
- தன் வாழ்க்கைத் திசையினை தானே நிச்சயித்தல்
- தனது வாழ்க்கைச்சூழலினை மேம்படுத்திக்கொள்ள திட்டங்கள் மற்றும் உத்திகளைத் தானே வகுத்துச் செயற்படுத்தல்

பொருளாதாரத்தின் நலிந்த சூழலிலிலிருந்து வருகின்ற இளம் நபர்கள், அவர்களின் வாழ்க்கைப் பாதையின் திசையை ஆள்வதில் மிகக் குறைவான பிடிப்பினையே வெளிப்படுத்துகின்றனர். “எனது குடும்பம் மிகவும் ஏழ்மையிலுள்ளது. என் வாழ்க்கையினை என்னால் கட்டுப்படுத்த முடியாது. அது போகிற போக்கில்தான் நான் போகவேண்டும்.” என அவர்கள் நினைக்கத் தொடங்குகின்றனர். இது ஆளுமை மற்றும் தன்னியக்க நம்பிக்கைக் குறைவுக்கு ஒரு எடுத்துக்காட்டு. வாழ்வாதாரப்பணி மேம்பாட்டில் ஏற்படும் தடைகளை எதிர்கொள்ளக் கையற்றிருப்பதை, தங்கள் நிகழ்காலச் சூழலில் அனுபவமாகும் வளஆதார நலிவுகளின் அடிப்படையிலேயே எதிர்காலத்தையும் நோக்குகின்ற ஒரு மனப்போக்கிலிருப்பதை, அவர்களது செயல்கள் பிரதிபலிக்கின்றன. மறுபக்கத்தில், உயர் வருவாய் பிரிவினரோ, தங்களுக்கான வாய்ப்புகளை அவர்களே உருவாக்கிக்கொள்வதிலும், வாழ்வாதாரப்பணி மேம்பாட்டுக்கான கடும் முயற்சிகளில் ஊக்கமுடன் ஈடுபடுவதற்கான உயர் வினைநோக்கம் கொள்வதிலும் அதிகபட்சச் செயல்களை வெளிப்படுத்துகின்றனர்.

### 3.4.4. விடாமுயற்சி நம்பிக்கைகள்

இலட்சிய வாழ்வாதாரப்பணி நோக்கிய தனிநபரின் நகர்வில் ஏற்படும் சிரமங்கள் மற்றும் தடைகளை எதிர்கொண்டு அவற்றை உடைத்தெறியும் முயற்சி மேற்கொள்வது, வெற்றிகரமான வாழ்வாதாரப்பணி மேம்பாட்டுக்குத் தேவைப்படுகிறது. விடாமுயற்சி நம்பிக்கைகள் பின்வருவனவற்றில் காணப்படுகின்றன.

- வாழ்வாதாரப்பணிக்கான செயல்களை மேற்கொள்ளும்போது சிரமங்கள் மற்றும் தடைகள் எதிர்ப்பட்டாலும், எதிர்கால வாழ்வாதாரப்பணி இலட்சியங்களை நோக்கிச் செயல்பட்டே தீர்வதென்ற உறுதிப்பாடு.
- சில குறிப்பிட்ட நிலைகளில் தோல்வி ஏற்பட்டாலும், வாழ்வாதாரப்பணி இலட்சியங்களை நோக்கித் தொடர்கின்ற விருப்பஉறுதி.
- நன்மையான எதிர்கால விளைவுகளுக்காகத் தீவிரமாக உழைக்கும் விருப்பஉறுதி.

இளம் நபர்களில் சிலர், “நான் ஒரு பாடப்பிரிவில் சேர்ந்தேன்; ஆனால் அதில் சில பாடங்கள் மிகவும் கடினமானவை. அது வேறு மிக நீண்ட நெடுநாள் பாடப்பிரிவு; அதுவுமில்லாமல் அந்தப் பயிலகம் என் வீட்டிலிருந்து மிகவும் தூரம். எனக்கு அந்தப் பாடப்பிரிவை விட்டுவிடலாமென தோன்றுகிறது.” எனப் பேசுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். இதுவே விடாமுயற்சி நம்பிக்கைக் குறைவுக்கு ஒரு எடுத்துக்காட்டு. மீண்டுமொருமுறை நாங்கள், வசதிக்குறைவான குடும்பத்து இளம்நபர்கள் மத்தியில் விடாமுயற்சி ஊக்கம் குறைவாகவும், சீரொழுங்கற்று உள்ளதென்பதையும் கண்டறிந்தோம். அப்போதைக்குக் கிடைக்கக்கூடிய உடனடி நன்மைகளுக்காக எதிர்காலத் தொடர்நலன்களை விட்டுக்கொடுத்துவிடுகிற, உறுதியான முன்தீர்மானத்தை அவர்களது செயல்கள் பிரதிபலிக்கின்றன. ஏழ்மை நிலையிலிருக்கும் இந்தியக் குடும்பத்து இளம் நபரின் வாழ்வாதாரப்பணிக் கனவு நனவாக வேண்டுமெனில், அவர் / அவள் வாழ்வாதாரப்பணிக்கான முன்திட்டங்களை வடிவமைத்துக்கொள்ளும் அதேநேரத்தில், ஏழ்மை, நிலையற்ற குடும்ப அமைப்புகள், அணுகவியலாத நிறுவன ஆதரவு மற்றும் நிதிவசதிச் சிக்கல்களுக்கு ஈடுகொடுக்கவும் வேண்டியிருக்கிறது. அத்தகைய பின்னணியிலிருந்து வரும் இளம் நபர்கள், எதிர்காலத்தில், எப்போதோ ஒரு நேரத்தில் பயனடையலாமென்பதற்காகத் திட்டமிடுவதென்பது, தற்போதய நடப்பியல் கருத்தோட்டங்களோடு ஒத்துப்போகாமலிருக்கலாம். ஆனால், இதற்கு மாறாக, மத்தியதரக் குழுவினர் விடாமுயற்சி ஊக்கத்தில் உயர்நிலையினை வெளிப்படுத்துகின்றனர். திட்டமிடல், இலக்கு நிர்ணயம் மற்றும் எதிர்காலத்திற்கான முன்தயாரிப்பு ஆகிய அவர்களது செயல்கள் எதிர்காலம்பற்றிய நெடுநாள் சிந்தனைநோக்கினைப் பிரதிபலிக்கின்றன.

**உங்கள் வரைவுச் சுருக்கம்**

**தற்புரிதலின் நான்கு முக்கியப் பிரிவுகள் குறித்து நாம் விவாதித்திருக்கிறோம். தற்புரிதலில் நாம் விவாதித்த நான்கு அம்சங்களையும் வரிசைப்படுத்துவதுடன், உங்கள் அனுபவத்தில் ஏதேனும் ஒன்றினைக் குறிப்பிடவும்.**

## 3.5. மானுட உள்ளாற்றலைப் புரிதல்

ஒப்பிடத்தக்க கட்டுமானங்கள், சொற்களஞ்சியம், மாணவர்களை மதிப்பிடுவதற்கும் வாழ்வாதாரப்பணிகளை வகைப்படுத்துவதற்குமான வழிமுறை ஆகியனவற்றைப் பயன்படுத்துகிற, கோட்பாட்டளவில் ஏற்புடைத்ததாக விளங்குகிற ஒரு கட்டமைப்பின் மீதே, வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதலின் பயனுள்ள அமைப்பு முறைமைகால் கொள்ளவேண்டும். அதுபோன்ற ஒரு கோட்பாட்டுத் தளம் இல்லாமலிருப்பது, தனிநபர் குறித்த தகவல்களும், பணி உலகம் குறித்த தகவல்களும் இருதரப்பினருக்கும் தெரியவந்து, தனிநபர் பயனுள்ள வாழ்வாதாரப்பணி முடிவுகளை மேற்கொள்வதைப் பாதிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும்.

மனிதன் பன்முகத்தன்மை கொண்டவன். கெடுவாய்ப்பாக, பள்ளிக் கல்விமுறை ஒருசில உள்ளாற்றல்கள் மீதே கவனம் செலுத்துவதாக உள்ளது. அதனால் பள்ளிப் பாடங்களில் சிறந்து விளங்காத மாணவர் மதிநுட்பமில்லாதவரென நிராகரிக்கப்படுகிறார். ஆனால், அனைத்து மாணவர்களும் ஏதேனுமொரு வகையில் மதிநுட்பம் வாய்ந்தவரேயென்ற புரிதலில் ஜீவா அணுகுமுறை உறுதிகொண்டுள்ளது.

ஜீவா அமைப்பு முறையானது, ஹோவர்டு கார்டனரின் பன்மைத்துவ மதிநுட்பக்கோட்பாட்டினைப் பின்பற்றுகிற பன்முக உள்ளாற்றல் கட்டமைப்பினை அடித்தளமாகக் கொண்டுள்ளது. அக்கோட்பாட்டினைப் பயன்படுத்துகிற எங்கள் அனுபவத்தில் கார்டனர் விவரிக்கிற ஐந்து மதிநுட்பங்கள், வழிகாட்டுதலுக்கு மிகவும் தொடர்பு கொண்டவையென்பதையே உறுதிப்படுத்துகின்றன.

### 3.5.1. மொழிசார் உள்ளாற்றல் (The Linguistic Potential)

இந்த உள்ளாற்றல், மொழியைப் பயன்படுத்துகிற சொல்லோட்ட செயல்திறனைப் பிரதிபலிக்கிறது. இது, சொல் மற்றும் சொற்கோவைகளைத் திறம்படக் கையாளும் திறனாகும். மொழியியல் செயல்திறனில் தேர்ச்சிகொண்ட ஒருவர் சொற்கள் உணர்த்தும் பொருட்கள் மற்றும் தகவல் தொடர்பில் பயனுள்ள வகையில் சொற்களைப் பயன்படுத்தும் திறமையில் கூருணர்வு மிக்கவராயிருக்கிறார். உரையாடல், விவாதம் மற்றும் பேச்சிலும், மொழியியல் செயல்திறன் சிறப்பாக வெளிப்பட இயலும். பார்வையாளர்களின் முழு கவனத்தையும் தன் பக்கம் ஈர்க்கும் திறமையுள்ள பொதுக்கூட்டச் சொற்பொழிவாளர் அல்லது வாடிக்கையாளரின் உணர்வுக் கருத்துக்கள் மற்றும் உணர்ச்சிப் பேரலைகளைத் துல்லியமாகப் பிரதிபலிக்கும் திறமையுள்ள வழிகாட்டுநர் போன்றோர், பேச்சுநிலையில் மொழியியல் செயல்திறனுக்கான எடுத்துக்காட்டுகளாவர். மொழியியல் உள்ளாற்றல் எழுத்து வடிவிலும் சிறப்பாக வெளிப்படும். நாடுகளின் வரலாற்றை மாற்றிய ஆற்றல்மிக்க கட்டுரைகள், மழைத்துளிகளின் தாளங்களை வெளிப்படுத்தும் கவிதைகள் மற்றும் நாளிதள்களுக்கு அனுப்பும் சிறப்பான செய்திக்குறிப்பு வரைவுகள் போன்றவை எழுத்து வடிவ மொழியியல் உள்ளாற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### 3.5.2. பகுப்பாய்வு மற்றும் முறைமைசார் உள்ளாற்றல் (The Analytical-Logical Potential)

தருக்க முறைமை சார்ந்து சிந்தித்தல், பகுப்பாய்வு செய்தல், காரணகாரியத் தொடர்புகளைப் புரிந்துகொண்டு சிக்கல்களைத் தீர்வுசெய்தல் போன்ற தனிசெயல்திறன், பகுப்பாய்வு மற்றும் முறைமைசார் உள்ளாற்றலால் வெளிப்படுகிறது. ஒரு சிக்கலின் இயக்கவியல் அடிப்படை மற்றும் அதன் உட்கூறுகளுக்கிடையிலான இணைப்புத்தொடர்களைப் புரிந்துகொள்ளவும் தீர்வுகளை அடையாளம் காண்பதுமான செயல்திறன், பகுப்பாய்வு மற்றும் தருக்க முறைமையினைச் செயற்படுத்துகிற மானுடசெயல்திறனோடு தொடர்புடையதாகும். அதுபோலவே, தரவுகளின் பெருந்திரளிலிருந்து தகவலைப் பகுத்துப் பிரித்தெடுப்பது, அத்தகவலின் பயன்மதிப்பினை முன்னுணர்தல், போக்குகள் மற்றும் படிம மாதிரிகளை அடையாளம் கண்டு முன்கணித்தல் போன்றவை அனைத்தும் பகுப்பாய்வு மற்றும் முறைமைசார் உள்ளாற்றல் சார்ந்தவையே. இதில் கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான ஒரு கருத்து என்னவெனில், இந்த உள்ளாற்றலைப் பெரும்பான்மையும் அறிவியல் மற்றும் கணிதவியலோடு தொடர்புபடுத்துவதாகும். இது தவறான ஒரு தொடர்புபடுத்தலாகும். பேரளவிலான மானுடப் பெருமுயற்சிகள் அனைத்துக்குமே, தருக்க சிந்தனை செயல்திறன் தேவைப்படுகிறது. அகழாய்வுப் புலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சீப்பு ஒன்றின் மூலமாக, புற மற்றும் முன் மதிப்பீட்டு அடிப்படையில் பழங்கால நாகரீகமொன்றின் ஆடைப்பழக்கவழக்கங்களை நமக்குத் தெரிவிக்கின்ற தொல்பொருள் ஆய்வாளர், நுண்கணிதத்தில் ஈடுபட்டுள்ள மற்றொருவரைப் போலவே தருக்க முறைமைச் சிந்தனை செயல்திறனையும் பயன்படுத்துகிறார்.

### 3.5.3. இடம் மற்றும் வெளிசார்ந்த உள்ளாற்றல் (The Spatial Potential)

இந்த உள்ளாற்றல், இடம் மற்றும் வெளி தொடர்பான உணர்திறன் மற்றும் இடம் மற்றும் வெளியினை இரட்டைப் பரிமாணம் அல்லது முப்பரிமாண நிலையில் காட்சிப்படுத்தும் செயல்திறன் தொடர்பானது. வடிவமைப்போடு தொடர்புடைய செயல்கள், இடம் மற்றும் வெளிசார்ந்த உள்ளாற்றலிலிருந்தே பெரிதும் உரம் பெறுகின்றன. காலிமனையில் கட்டப்படவிருக்கும் கட்டடத்தைத் தன் மனக்கண் முன் எழுப்பிக்கொள்கிற கட்டடக்கலைஞர் மற்றும் கற்பாறைக்குள் சிலையின் வடிவத்தைக் காணுகின்ற சிற்பி போன்றோர், இந்த இடம் மற்றும் வெளிசார்ந்த திறமை மற்றும் செயல்திறன்களையே பயன்படுத்துகின்றனர். வண்ணங்களைக் கூருணருந்திறன், இடம் மற்றும் வெளிசார்ந்த உள்ளாற்றலின் மற்றொரு மகிமை வெளிப்பாடாகிறது. வெறுமனே, திரைச்சீலைகளின் வண்ணங்களை மாற்றுவதன் மூலமே மங்கலான ஒரு அறையின் தோற்றத்தை மாற்றிவிடுகிற உள்பகுதி வடிவமைப்பாளர், அவரது இடம் மற்றும் வெளிசார்ந்த உள்ளாற்றலையே பயன்படுத்துகிறார். இடம் மற்றும் வெளிசார்ந்த உள்ளாற்றலோடு பெரும்பாலும் குழப்பிக்கொள்கிற ஒரு கருத்து படைப்பாற்றலாகும். படைப்பாற்றல் என்பது அடிப்படை மானுடப்பண்புகளில் ஒன்று. படைப்பாக்கத்திற்கு அநேகமாக அனைத்து இயல்திறன்கள் மற்றும் உள்ளாற்றல்களுமே தேவையாகின்றன.

மற்றவர்களின் படைப்புகளை நகலெடுக்கமட்டுமே இயலுகிற, படைப்பாக்கம் இல்லாத கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களையும் பல நேரங்களில் நாம் எதிர்கொள்கிறோம். மாறாக, படைப்பாற்றலுள்ள ஒரு எழுத்தாளர் அல்லது படைப்பாற்றலுள்ள தர்க்கவாதிகள் அவரவர் இயல்திறன்களுக்கே உரிய அசலான தற்பண்புகளை, வெளிப்படுத்துகின்றனர். படைப்பாற்றலென்பது வெறுமனே ஒரு இயல்திறனாக அல்லாமல் மானுடத்தின் உள்ளகத் தனிப்பண்புக் கூறாகவே புரிந்துகொள்ளப்படுகிறதென்பது முக்கியமாகிறது. இடம் மற்றும் வெளிசார்ந்த உள்ளாற்றல், இடம் மற்றும் வெளியைக் கையாளுகிற செயல்திறன்களைப் பிரதிபலிக்கிறது.

### 3.5.4. மக்கட்பண்பியல் உள்ளாற்றல் (The Personal Potential)

தன்னைப் பற்றிய அறிவும், பிறரை உணரும் தன்மையும் மக்கட்பண்பியல் உள்ளாற்றலைப் பிரதிபலிக்கின்றன. இந்த உள்ளாற்றலை வெளிப்படுத்தும் நபர்கள் அவரவர் உணர்வு மற்றும் விழுமியங்கள் மீது மிக உயர்ந்த அளவில் கட்டுப்பாடு மற்றும் விழிப்புணர்வுடன் விளங்குகின்றனர். உயர்ந்த அளவில் மக்கட்பண்பியல் உள்ளாற்றல் கொண்டவர் பிறரின் மனநிலை மற்றும் உணர்ச்சிகள் குறித்து அதிக கவனமுள்ளவராக இருக்கிறார். பிறரைப் புரிந்துகொள்ள இயல்வதோடு, மனித நடத்தைகளை உருவாக்கி அவற்றின் மீது செல்வாக்கும் செலுத்துகின்ற மனவிசைகளுக்கேற்றவாறு இயங்குகின்ற மனிதர்களும் உள்ளனர். புறவயத்தன்மைகொண்ட மனிதர்கள் அதிகளவிலான மக்கட்பண்பியல் உள்ளாற்றல் கொண்டவர்களாக இருப்பாரென்பது பொதுவானதும் தவறானதுமான ஒரு புரிதலாக உள்ளது. பிறரைச் சிரிக்கவைப்பது அல்லது ஒரு குழுவின் உயிர்நிலையாக விளங்குவது, மக்கட்பண்பியல் மதிநுட்பத்தைப் பிரதிபலிப்பதுடன் அதே அளவில் மிக அமைதியாகப் பிற மனிதர்கள், அவர்களது மனநிலை, சிந்தனை மற்றும் நடத்தைகளைப் புரிந்துகொள்ளும் செயல்திறனையும் வெளிப்படுத்துகிறது. மிக முக்கியமாக, உயர் அளவில் மக்கட்பண்பியல் உள்ளாற்றலுள்ள ஒருவரால் மனித நடத்தைகளின் பின்னாலிருக்கும் காரணங்களைத் தருக்கரீதியாகக் கண்டடையவும் மனித நடத்தைகள் மீது செல்வாக்கு செலுத்துவதுடன் அவற்றை உருவாக்கவும் இயலும்.

### 3.5.5. உடல்-இயந்திர மற்றும் பொறிமுறை உள்ளாற்றல்
**(The Physical-Mechanical Potential)**

நம்மில் சிலர் அவரவர் உடலினைப் பயன்படுத்துவதில் தனிச்சிறப்புடைய, தங்குதடையற்ற இயல்வேகம் கொண்டவர்களாக இருக்கிறோம். உடல்-இயந்திர மற்றும் பொறிமுறை உள்ளாற்றல் உடலின் அசைவுகள் மற்றும் வெளிக்காட்டல் ஆகியவற்றில் தேர்ச்சிக்கான இணைப்போடு தொடர்புடையது. அதுவே அசைப்பதன் இயல்வேகம். வெட்டி வீழ்த்தப்படும் மரத்தின் வேதனையை நம் கண்முன் கொணருகிற திறமைமிக்க நடனக்கலைஞரும், நாடக மேடையின் ஒரு மூலையினை, உடலசைவின் மூலமாகவே அமிழ்ந்தமிழ்ந்தெழும் கப்பல் தளமாக மாற்றுகின்ற நடிப்புக் கலைஞருமான இருவருமே உணர்வு, மனநிலை, உணர்வெழுச்சி மற்றும் செய்திகளை வெளிப்படுத்த, அவர்களது உடலினைப் பயன்படுத்துகின்றனர்.

வாழ்வாதாரப்பணிகளுக்கு தாங்குதிறமும், உடல் வலிமையும் தேவைப்படுவதோடு உடல்-இயந்திர மற்றும் பொறிமுறை உள்ளாற்றலும் தேவைப்படுகிறது. தடகள வீரர், பாதுகாப்புச் சேவை வல்லுநர்களுக்கு உடல்-இயந்திர மற்றும் பொறிமுறை உள்ளாற்றல் தேவை. இந்த உள்ளாற்றல் தனிநபரின் உடற்தசையியக்க செயல்திறனோடு தொடர்புடையது. விசை இயக்கவியலின் விதிகள் மீதான தனித்தொரு கூருணர்வினை வெளிப்படுத்தும் இந்நபர்கள் கருவிகளைப் பயன்படுத்துவதில் சிறந்து விளங்குகின்றனர். இவ்வகை மாதிரிக்குப் பொருத்தமாக, பொறியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் இயந்திர, தளவாடக் கருவிகளோடு தொடர்புள்ள பிறர் மிகவும் மேம்பட்டதொரு உடல்-இயந்திர மற்றும் பொறிமுறை செயல்திறனை வெளிப்படுத்துகின்றனர்.

### 3.5.6. பல்வகை உள்ளாற்றல் சுயவிவரம்

இந்த உள்ளாற்றல்கள் அனைத்து மனிதர்களையும் பண்புவகையில் உருப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, நாம் எல்லோருமே சொற்களைப் பயன்படுத்துதல் மற்றும் ஒரு மொழியினைப் பேசுவதில் செயல்திறனை வெளிப்படுத்துகிறோம். அனைத்து மனிதர்களுமே தருக்க முறைமையில் சிந்திக்கும் செயல்திறன் பெற்றிருப்பதோடு, இடம் மற்றும் வெளிசார்ந்த திறன்களையும் கொண்டுள்ளோம். மக்கட்பண்பியல், உடல்-இயந்திர மற்றும் பொறிமுறைத் திறன்களையும் கொண்டுள்ளோம். அதுபோலவே, அனைத்து மனிதர்களின் நடத்தைப் பண்புவகையில் உருப்படுத்துகின்றன. இதில் கவனத்தில்கொள்ள வேண்டியதென்னவெனில், ஒரு தனிநபரின் உள்ளாற்றல் சுயவிவரத்திற்குள்ளாகவே சில உள்ளாற்றல்கள், பிற உள்ளாற்றல்களை விடவும், உயரளவுக்கு வளர்ச்சியடைகின்றன. இந்த உள்ளாற்றல் தொகுப்பிலேயே, வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதல் திட்டம் ஆர்வம் கொள்கிறது. தனிநபர் ஒருவர் அதிக உள்ளாற்றலை வெளிப்படுத்தும் புலங்களை அடையாளம் காண, கூர்நோக்குதல் மற்றும் பொருத்தமான ஆய்வுத் தொழில்நுட்பங்கள் எங்களுக்கு உதவுகின்றன. இந்த `உயர்நிலை`, `தாழ்நிலை`கள் அளிக்கின்ற சட்டக அமைப்புக்குள் வாழ்வாதாரப்பணி வழிகாட்டுதல் முன்னேற இயலும். அதே கோட்பாட்டுச் சட்டக அமைப்பு, உள்ளாற்றல்களை மதிப்பிடவும் வாழ்வாதாரப்பணிகளை வகைப்படுத்தவும் பயன்படுகிறது.

## 3.6. பண்பாடும் வாழ்வாதாரப்பணியும்

ஒரு பண்பாடு, அதன் மக்களை, வாழ்க்கையில் குறிப்பிட்டவொரு வழிமுறையிலேயே ஈடுபடுமாறு தயார்படுத்துகிறது. ஒரு தனிநபருக்கும் அவர்/அவளது பண்பாட்டுக்கும் இடையே நடைபெறுகின்ற கற்றல், அவர்/அவளது சமூகத்தில் பல்யுகங்களாகத் தொடர்வதோடு வளர்ந்துமிருக்கிற அனுபவத்தொகுப்பிலிருந்து பெறப்படுகிறது. நாம் எல்லோருமே, வாழ்க்கையோடான நமது தொடர்பினை உருவாக்குகின்ற மனப்பான்மைகள், அபிப்பிராயங்கள், உறுதிப்பாடுகள் மற்றும் கருத்தோட்டங்களில் மூழ்கியிருக்கிறோம். நாம் எல்லோருமே, நமது பண்பாடுகளினால் குறிப்பிட்ட ஒரு வகையிலேயே பணியில் ஈடுபடுமாறு தயார்படுத்தப்பட்டிருக்கிறோம். நமது பண்பாட்டிலிருந்து பெற்ற இக்கற்றல், பணியோடு நம்மைத் தொடர்புபடுத்துகிற மனம் மற்றும் உணர்வெழுச்சிச் சமநிலைக்கு நம்மைக் கொண்டுசெலுத்துகிறது. இந்த பரிமாற்ற உள்வினை தான் வாழ்வாதாரப்பணிசார் நம்பிக்கைகள்; மேலும், இவை இச்சமநிலையினைப் பராமரிக்கவும் உதவுகின்றன.

ஒவ்வொரு பண்பாடும் அதன் இளையர்களுக்கு பணி உலகம் குறித்துக் கற்பிக்க, அது அதற்கேயான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. நம்பிக்கைகள், விழுமியங்கள், சடங்குகள் மற்றும் சமூக அமைப்புகள், பணி, தொழில் மற்றும் வாழ்வாதாரப்பணி குறித்த மனப்போக்கில் செல்வாக்கு செலுத்துகின்றன. திட்டத்தலையீடு ஒன்று பயனுள்ளதாக அமையவேண்டுமானால், அது, எந்தச் சமூகம் பயனடையவேண்டுமென்று திட்டம் வளர்த்தெடுக்கப்படுகிறதோ, அச்சமூகத்தின் வாழ்க்கை

வழிமுறைகள் மற்றும் உலகப் பார்வைகளின் அடிப்படையில் அமையவேண்டுமென்ற அடிப்படைப் புரிதல் மீதே ஜீவா அணுகுமுறை கட்டமைக்கப்பட்டுள்ளது.

## வகுப்பீடு

**இந்த அலகு பற்றிய உங்கள் சுய கற்றலை முடிப்பதற்கான இறுதி படி ஒரு எளிய வகுப்பீட்டை சமர்ப்பிப்பதாகும்.**

- **கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்க. நீங்கள் வகுப்பீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்**
- **வகுப்பீட்டின் முடிவில் Submit பொத்தானைக் கிளிக் செய்க. உங்கள் பதில்கள் தானாக எங்களுக்கு வந்துசேரும்**
- **அடுத்த அலகுக்குச் செல்லவும்.**
- **நீங்கள் எங்களிடமிருந்து மதிப்பீட்டைப் பெறுவீர்கள்**

**Link:** https://forms.gle/4T7kQVh2KBi6aDt29

**முக்கியம்:** நீங்கள் 7 வகுப்பீடுகள் அனைத்தையும் நேருக்கு நேர் மெய்நிகர் பயிற்சிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.